சுருக்கம்

விழா – தேசியத் தலைவர்கள் மற்றும் அறிஞர் பெருமக்கள் பிறந்த நாட்கள் மற்றும் நினைவு நாட்களில் அவர்தம் திருவுருவச் சிலைக்கு அருகில் புகைப்படம் வைத்து மலர் அலங்காரம் செய்து மலர்தூவி மரியாதை செலுத்துதல் – 2021-2022-ஆம் நிதி ஆண்டுக்கான செலவினத்திற்கு ரூ.18,30,000/- (ரூபாய் பதினெட்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி மற்றும் விழா)த் துறை

அரசு ஆணை (ப) எண்.79 நாள்: 30.07.2021

திருவள்ளுவர் ஆண்டு 2052

பிலவ, ஆடி 14-ஆம் நாள்

படிக்கப்பட்டது :

1. அரசாணை (ப) எண்.75, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொ(ம)விழா)த் துறை, நாள் 04.07.2019.
2. அரசாணை (ப) எண்.73, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொ(ம)விழா)த் துறை, நாள் 10.08.2020.
3. அரசாணை (ப) எண்.74, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொ(ம)விழா)த் துறை, நாள் 10.08.2020.
4. அரசாணை (நிலை) எண்.26, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொ(ம)விழா)த் துறை, நாள் 16.02.2021.

ஆணை:-

தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னையில் ஆண்டுதோறும் தேசியத் தலைவர்கள் மற்றும் அறிஞர் பெருமக்களின் பிறந்த நாட்கள் மற்றும் நினைவு நாட்களில் அவர்தம் திருவுருவச் சிலைக்கு அருகில் புகைப்படம் வைத்து, மலர் அலங்காரம் செய்து மலர்தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சியில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கும் 34 நிகழ்ச்சிகள் செய்தித் துறை மற்றும் பொதுப்பணித் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2. செய்தி மக்கள் தொடர்புத் துறையால் திருவுருவச் சிலைக்கு ஆறு அடி உயர மாலை ஒன்றும், படத்திற்கு சிறிய மாலை ஒன்றும், இரண்டு விளம்பர பேனர்கள், 30" X 40" என்ற அளவில் புகைப்படங்கள் தயாரித்து அதற்கு பிரேம் போடுதல், சிலையை சுற்றி பீடத்திற்கு மலர் அலங்காரம், உதிரிப் பூக்கள் ஏற்பாடு செய்தல் மற்றும் விழாவில் கலந்து கொள்பவர்களுக்கு சிற்றுண்டி வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த 34 நிகழ்வுகளில், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் விழாக்களில் விழா ஒன்றிற்கு ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) வீதம் 9 விழாக்களுக்கு ரூ.2,70,000/-மும் (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபதாயிரம்

மட்டும்) மற்றும் தீரன் சின்னமலை நினைவு நாள் நிகழ்ச்சிக்கு ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)மும், புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா பிறந்த நாள் விழாவிற்கு ரூ.1,20,000/- மும் (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் விழாக்களில் விழா ஒன்றிற்கு ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வீதம் 23 விழாக்களுக்கு ரூ.4,60,000/-மும் (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ஆக மொத்தம் 34 விழாக்களுக்கு ரூ.9,00,000/- (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) செலவினம் செய்தித் துறைக்கு ஏற்படும் என கணக்கிடப்பட்டுள்ளது. அதேபோல் பொதுப்பணித் துறையால், சாமியானா பந்தல் அமைத்தல், முக்கிய பிரமுகர்கள் அமர்வதற்கு நாற்காலிகள், வரவேற்பு கம்பளம் அமைத்தல், சிலைக்கு வர்ணம் பூசுதல், சிலை அமைந்துள்ள இடத்தினை சுற்றியுள்ள RCC Jolly-களுக்கு வர்ணம் பூசுதல், பூந்தொட்டிகளை எடுத்து வந்து, எடுத்துச் செல்லுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக, இந்த 33 நிகழ்வுகளில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் 10 விழாக்களில் 9 விழாக்களுக்கு விழா ஒன்றிற்கு ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவிற்கு ரூ.20,000/-மும் (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் ஏனைய 23 விழாக்களுக்கு விழா ஒன்றிற்கு ரூ.20,000/-மும் (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) ஆக மொத்தம் 33 நிகழ்வுகளுக்கு ரூ.9,30,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) செலவினம் ஏற்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | விழா நாள் | திருவுருவச்சிலை மற்றும் நினைவிடம் | செய்தி மக்கள் தொடர்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை | பொதுப்பணித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 14.04.2021 | டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 2 | 17.04.2021 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 26.04.2021 | சித்திரை முழு நிலவு நாளன்று கண்ணகி சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 4 | 27.04.2021 | சர்.பிட்டி. தியாகராயர் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 5 | 29.04.2021 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல் | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 6 | 05.06.2021 | கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் மலர் போர்வை அணிவித்து மரியாதை செலுத்துதல். | ரூ.30,000/- | ரூ.50,000/- |
| 7 | 24.06.2021 | கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 8 | 26.06.2021 | ம.பொ.சிவஞானம் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 07.07.2021 | இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செய்தல் | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 10 | 11.07.2021 | வீரன் அழகு முத்துக்கோன் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 11 | 15.07.2021 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.30,000/- | ரூ.50,000/- |
| 12 | 17.07. 2021 | தியாகிகள் தினத்தன்று தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் நினைவைப் போற்றும் வகையில் அவரது மார்பளவு சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 13 | 17.07. 2020 | தியாகிகள் தினத்தன்று தியாகி சங்கரலிங்கனார் நினைவைப் போற்றும் வகையில் அவரது மார்பளவு சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செய்தல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 14 | 17.07. 2020 | தியாகிகள் தினத்தன்று தியாகி செண்பகராமன் நினைவைப் போற்றும் வகையில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | ஆடி மாதம் 18-ஆம் நாள் | தீரன் சின்னமலை நினைவுநாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.50,000/- | ரூ.20,000/- |
| 16 | 05.09.2021 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 17 | 15.09.2021 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.30,000/- | ரூ.50,000/- |
| 18 | 16.09.2021 | இராமசாமி படையாட்சியார் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு சென்னை கிண்டி ஹால்டா சந்திப்பில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 19 | 17.09.2021 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.30,000/- | ரூ.50,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | 27.09.2021 | டாக்டர்சி.பா.ஆதித்தனார் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 21 | 29.09.2021 | மேயர் சிவராஜ் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 22 | 01.10.2021 | நடிகர் திலகம் சிவாஜிகணேசன் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு சென்னை அடையாறில் துர்காபாய் தேஷ்முக் சாலையில் அமைந்துள்ள அன்னாரது மணிமண்டபத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 23 | 02.10.2021 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.30,000/- | ரூ.50,000/- |
| 24 | 30.10.2021 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.30,000/- | ரூ.50,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | 08.11.2021 | தமிழறிஞர் வீராமாமுனிவர் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 26 | 14.11.2021 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.30,000/- | ரூ.50,000/- |
| 27 | 23.11.2021 | கவிஞர் சுரதா பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல், மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 28 | 10.12.2021 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம்செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 29 | 11.12. 2021 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 30 | 17.01.2022 | முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.30,000/- | ரூ.50,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | 23.01.2022 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப் படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 32 | 30.01.2022 | அண்ணல் காந்தியடிகள் நினைவு நாளினையொட்டி அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.30,000/- | ரூ.50,000/- |
| 33 | 18.02.2022 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 34 | 24.02.2022 | புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவ புகைப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர் தூவி மரியாதை செலுத்துதல். | ரூ.1,20,000/- | |
| | | மொத்தம் | ரூ. 9,00,000/- (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) | ரூ.9,30,000/ (ரூபாய் ஒன்பது இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்)- |

3) அரசின் கவனமான பரிசீலனைக்கு பின்னர், மேலே பத்தி 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய தலைவர்கள் மற்றும் அறிஞர் பெருமக்கள் பிறந்த நாட்கள் மற்றும் நினைவு நாட்களில் அவர்தம் திருவுருவச் சிலைக்கு அருகில் புகைப்படம் வைத்து செய்தித் துறையின் மூலம் மலர் தூவி மரியாதை செலுத்தப்படும் 34 நிகழ்வுகளில்,

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் விழாக்களில் விழா ஒன்றிற்கு ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) வீதம் 9 விழாக்களுக்கு ரூ.2,70,000/-மும் (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்), தீரன் சின்னமலை நினைவு நாள் நிகழ்ச்சிக்கு ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)மும், புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா பிறந்த நாள் விழாவிற்கு ரூ.1,20,000/- மும் (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் விழாக்களில் விழா ஒன்றிற்கு ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வீதம் 23 விழாக்களுக்கு ரூ.4,60,000/-மும் (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ஆக மொத்தம் 34 விழாக்களுக்கு ரூ.9,00,000/-க்கும் (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்), அதேபோல், பொதுப்பணித் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு 33 நிகழ்வுகளில், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் 10 விழாக்களில் 9 விழாக்களுக்கு விழா ஒன்றிற்கு ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) வீதம் ரூ.4,50,000/-மும் (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்), பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவிற்கு ரூ.20,000/-மும் (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் ஏனைய 23 விழாக்களுக்கு விழா ஒன்றிற்கு ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வீதம் ரூ.4,60,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்)ஆக மொத்தம் 33 நிகழ்வுகளுக்கு ரூ.9,30,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், அரசு கடிதம் எண்.15417/நிதி (வ,செ,பொ.1)த் துறை நாள். 30.03.2021-ல் பின்பற்றப்படும் காலாண்டு கட்டுப்பாட்டிலிருந்து தளர்வுகள் செய்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும், இந்த காலாண்டு கட்டுப்பாடு தளர்வுகள் ஒருங்கிணைந்த மேலாண்மை திட்டத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது.

4) மேலே, பத்தி 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள விழாக்களில் செய்தித்துறையால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான செலவினத் தொகை ரூ.9,00,000/-ஐ (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) 2021-2022-ஆம் நிதியாண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீட்டிலிருந்து மேற்கொள்ளப்படுவதுடன் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2220 செய்தி மற்றும் விளம்பரம் -60 ஏனையவை-106 கள விளம்பரம் - மாநிலச் செலவினங்கள் - AIவெளியிடுதல்-308 விளம்பரமும் பிரச்சாரமும்-09 ஏனையவை"(த.தொ.கு.2220-60-106-AI-0893)OLD
(த.தொ.கு.2220-60-106-AI -30809) IFHRMS

5) மேலே, பத்தி 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள விழாக்களில் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான செலவினத் தொகை ரூ.9,30,000/-ஐ (ரூபாய் ஒன்பது இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2220 செய்தி மற்றும் விளம்பரம் - 60 ஏனையவை - 106 கள விளம்பரம் - மாநிலச் செலவினங்கள் - AJ பொதுப்பணித்துறை, தலைமைப்பொறியாளர் (பொது) ஏற்பாடு செய்யும் விளம்பரம், பிரச்சாரத்திட்டங்கள் -317 சிறு பணிகள் - 01 சிறுபணிகள்" (த.தொ.கு.2220-60-106-AJ-1701) OLD (த.தொ.கு.2220-60-106-AJ -31701) IFHRMS

6) மேலே, பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநருக்கும், பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) அவர்களுக்கும் அனுமதி அளிக்கப்படுகிறது.

7) மேலே, பத்தி 2-இல் குறிப்பிட்டுள்ள 34 தேசியத் தலைவர்கள் மற்றும் அறிஞர் பெருமக்களின் பிறந்த நாட்கள் மற்றும் நினைவு நாட்களுக்கான செலவினத்தை மேலே, பத்தி 3-இல் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட வேண்டும். ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை விட கூடுதலாக மேற்கொள்ளப்படும் செலவினத்திற்கு கூடுதல் நிதியொதுக்கம் கோரப்படின் கட்டாயம் அரசால் வழங்க இயலாது. அதேபோல், மேற்படி செலவினங்களை தமிழ்நாடு நிதிவிதியியல் கோட்பாடுகள் விதித் தொகுப்பு–I விதி 99-னை பின்பற்றி மேற்கொள்ள செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநருக்கும், பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளருக்கும் (கட்டடங்கள்) அறிவுறுத்தப்படுகிறது.

8) மேலே, பத்தி 3-இல் உள்ள செய்தித்துறை மூலம் ஏற்படும் செலவின முன்பணத்திற்கு தமிழ்நாடு நிதித் தொகுப்பு, பாகம் I - விதி 99-இன் கீழ் முன்பணமாக பெற அனுமதி அளிக்கப்படுகிறது. விழாக்களை உரிய நாட்களில் கொண்டாடுவதற்கு ஏதுவாக, 31.01.1981 –ஆம் தேதியிட்ட நிதித்துறையின் கடிதம் எண்.136452/ சம்பளம்/80-1-இல் உள்ள விதிமுறைகள் சிறப்பு நிகழ்வாகத் தளர்த்தப்படுகிறது. ஆகவே, இந்த முன்பணத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (கணக்கு)த் துறையின் கணக்கு அலுவலருக்கு (செய்தி) வழங்குமாறு, சம்பள கணக்கு அலுவலர், சென்னை-9 கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், மேலே பத்தி 2-இல் கொடுக்கப்பட்டுள்ள விழாக்களில், நிர்வாகக் காரணங்களினால், விழா நடைபெறும் முன்னர் முன்பணம் பெற இயலாமல் நடைபெற்ற விழாக்களுக்கு, விழா முடிந்த பின்னர் ஒப்பளிக்கப்பட்ட முன்பண தொகைக்கான விரிவான செலவு சீட்டு பட்டியல் மூலம் சரிகட்டப்பட வேண்டும்

9) மேலே, பத்தி 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விழா தொடர்பான நிகழ்ச்சிக்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட அந்தந்த விழாவிற்கே செலவினத்தை மேற்கொள்ளப்பட வேண்டும். எதிர்பாராத விதமாக எந்த ஒரு விழாவும் கொண்டாடவில்லையெனில், அவ்விழாவிற்கு ஒப்பளிக்கப்பட்ட தொகையை வேறு விழாக்களுக்கோ அல்லது வேறு செலவினங்களுக்கோ பயன்படுத்தக் கூடாது. நிதியாண்டு இறுதியில் அவ்விழாவிற்குரிய தொகை அரசுக் கணக்கில் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

10) விழாக்கள் அரசு குறிப்பிட்டுள்ள நாட்களில் கண்டிப்பாக கொண்டாடப்பட வேண்டும். விழா முடிந்த பதினைந்து நாட்களுக்குள் விழா தொடர்பான அறிக்கையினை உரிய படிவத்தில் அரசின் பார்வைக்கு தவறாது அனுப்பி வைக்க வேண்டும். விழா முடிந்த பின்னர் பெறப்பட்ட முன் பண

த்திற்கான செலவினப் பட்டியல்களுடன் பட்டியலிட்டு அதற்கான செலவின ஒப்பளிப்பு ஆணையுடன் உரிய காலத்திற்குள் நேர் செய்யப்பட வேண்டும்.

11) மேலே பத்தி 2-இல் உள்ள விழாக்கள் தவிர வேறு விழாக்கள் அல்லது நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டுமென்று கருதினால், அரசின் ஒப்புதல் முன்னரே பெறப்பட வேண்டும்.

12) இந்த ஆணை நிதித்துறையின் ஒத்திசைவுடன் அதன் அலுவல் சாரா எண்.29864/ நிதி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி)த் துறை/2021, நாள்.27.07.2021-ன்படி, வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி //

மகேசன் காசிராஜன்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
இணை இயக்குநர் (நினைவகங்கள்) செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
சம்பள கணக்கு அலுவலர், (கிழக்கு/தலைமைச் செயலகம்) சென்னை- 8/9.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 9/18.
கணக்கு அலுவலர் (செய்தி), தமிழ் வளர்ச்சி மற்றும்செய்தித்துறை, சென்னை 9 (மூலமாக).
தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை, சென்னை- 5.
தலைமைப் பொறியாளர் (கணக்கு),பொதுப்பணித்துறை, சென்னை- 5.
செயற்பொறியாளர் (மெரினா),பொதுப்பணித்துறை, சென்னை- 5.
செயற்பொறியாளர் (எஸ்பிடி),பொதுப்பணித்துறை, சென்னை- 5.
இளநிலை பொறியாளர், பொதுப்பணித்துறை, அரசினர் தோட்டம், சென்னை- 2.

<u>நகல்:</u>

நிதி(தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி/பொதுப் பணி-I/வ.வ.மு-I)த்துறை,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (வரவு செலவு/கணக்கு)த் துறை, சென்னை.
இருப்புகோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்